2019 ஜூலை 18]

(ஒ) இடதுசாரி கட்சித் தலைவர் திரு. ஆர். நல்லகண்ணு அவர்களுக்கு வீட்டு வசதி வாரியம்மூலம் மீண்டும் குடியிருப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரரும், தமிழ்நாட்டு மக்களுடைய மிகுந்த அன்புக்குரியவருமான முதுபெரும் இடதுசாரி தலைவர் ஐயா திரு. நல்லகண்ணு அவர்களைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட செய்தியும், பிறகு அவருக்கு வீடு ஒதுக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்த செய்தியும், ஊடகங்களில் வந்து பரபரப்பானது. அவருக்கு மீண்டும் வீடு ஒதுக்கப்படும் என்று தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அது என்னவாயிற்று என்று தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர அபிவிருத்தி கழகத்தின்மூலம் 1953 ஆம் ஆண்டில் வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தில் 119 வீடுகள் CIT காலனியில் கட்டப்பட்டு, பொதுமக்களுக்கு பொது ஒதுக்கீடு முறையில் மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன.*

இந்தக் காலனியில் பிளாட் எண் 35 ஆனது, முன்னாள் மாண்புமிகு அமைச்சர் பெரியவர் லேட் பி. கக்கன் அவர்களுக்கு 1971 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வீட்டு வாடகைக்கு விலக்கு அளித்து அப்பொழுது உத்தரவுமிடப்பட்டது. 1981-ல் அவரது இறப்பிற்குப் பின்னர் அவரது மனைவி திருமதி சொர்ணம் பார்வதி என்பவருக்கும், 27-6-1987-ல் திருமதி சொர்ணம் பார்வதி இறப்பிற்குப் பின்னர் லேட். பெரியவர் பி. கக்கன் அவர்களின் மகன்கள் திரு. பி.கே. சத்யநாதன் மற்றும் திரு. பி.கே. ராஜமூர்த்தி ஆகியோருக்கும் வாடகையின்றி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜூலை 18 பிற்பகல் 12—15

1953 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த வீடுகள், 2004—2005—ல் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால், வீடுகளை இடித்துவிட்டு, ஒருங்கிணைந்த திட்டத்தை செயல்படுத்த வாரியத்தால் முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், பெரியவர் திரு. ஆர். நல்லகண்ணு அவர்களுக்கு 2007 ஆம் ஆண்டில் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சுய நிதித் திட்டத்தின்கீழ் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டமும் அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2011 ஆம் ஆண்டு அனைத்துக் குடியிருப்புதாரர்களுக்கும் குடியிருப்புகளைக் காலி செய்ய தாக்கீது அனுப்பப்பட்டது. இந்தத் தாக்கீதினை எதிர்த்து குடியிருப்புதாரர்கள் பலர் சென்னை உயர் நீதிமன்றத்திலும், புதுடெல்லியிலுள்ள உச்ச நீதிமன்றத்திலும் பல்வேறு வகையான வழக்குகளைத் தொடர்ந்தனர்.

வழக்குகளில் இறுதியாக, சென்னை, உயர் நீதிமன்ற நீதிப்பேராணை எண் 5533/2019—ல் 5—3—2019 தேதியன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் 31—3—2019 ஆம் தேதி வரை மட்டும் அந்தக் குடியிருப்பில் குடியிருக்க அனுமதி வழங்கப்பட்டது. எனவே, 1—4—2019 ஆம் தேதி வழக்கு தொடர்ந்த நபர்களின் குடியிருப்புகளைக் காலி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மொத்தமுள்ள 119 குடியிருப்புகளில் இதுவரை 96 குடியிருப்புதாரர்கள் வீடுகளை வாரியத்திடம் ஒப்படைத்துள்ளனர். இந்நிலையில், 10—5—2019 ஆம் தேதியன்று திரு. நல்லகண்ணு ஐயா அவர்கள் தாமாகவே முன்வந்து வீட்டைக் காலி செய்துள்ளார். ஆனால், இதுவரை முறையாக வாரியத்திடம் ஒப்படைப்பு செய்யவில்லை. பெரியவர் (லேட்) திரு. பி. கக்கன் அவர்களுடைய குடும்பத்தினர் இதுவரை குடியிருப்பினை வாரியத்திடம் ஒப்படைக்கவில்லை. தற்போது அரசால், சமூகத்தில் மிகவும் முக்கியமான மற்றும் தவிர்க்க முடியாத நபர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக பொது ஒதுக்கீடு முறையில் வீடுகள் வழங்குவது வழக்கமாக உள்ள நடைமுறைதான்.

இந்தப் பிரச்சினை வெளியே வந்தபோது, நானே சம்பந்தப்பட்ட பெரியவர் திரு. நல்லகண்ணு அவர்களைத்

2019 ஜூலை 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அதிகாரிகளை உங்களிடம் அனுப்பி வைக்கிறேன். உங்களுக்குப் பிடித்தமான வீடு எதுவாக இருந்தாலும் தேர்வு செய்து சொல்லுங்கள், உடனே அதை பொது ஒதுக்கீட்டில் வழங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது, தற்போது இருக்கின்ற வீடு மிகவும் பழுதடைந்திருக்கிறது என்றும், 1953–ல் கட்டப்பட்ட வீடு என்றும் சொன்னேன். அவர், பரவாயில்லை, நான் ஒரு வீடு பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னார். அவருக்கு இன்னும் ஒதுக்கவில்லை.

திரு. நல்லகண்ணு அவர்களையும், பெரியவர் திரு. கக்கன் அவர்கள் குடும்பத்தாரையும் பொறுத்தவரையில், இன்னும் அவர்கள் இருந்த வீட்டை வாரியத்திடம் ஒப்படைக்கவில்லை. திரு. பி. கக்கன் அவர்களுடைய குடும்பத்தார் கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக, இன்னும் அந்த வீட்டில்தான் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த பலவந்தமும் கொடுக்கவில்லை. பலவந்தப்படுத்தி வீட்டைக் காலி செய்ததாக வந்த செய்திகள் தவறான செய்திகள். அதை நான் முழுமையாக மறுக்கிறேன். இந்த இரு மாபெரும் தலைவர்களுக்கு வாடகை இல்லாமல் எந்த நேரத்திலும் மாண்புமிகு அம்மாவின் அரசு வீடுகளை ஒதுக்கித் தரும் என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, இதுகுறித்து பத்திரிகைகளில் வந்த செய்திகள் உண்மைக்கு மாறான தகவல் என்பதையும் அந்த நேரத்தில் அவரே பேட்டி கொடுத்திருக்கிறார். சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னைத் தொடர்பு கொண்டு நல்ல செய்தி சொல்லியிருக்கிறார் என்ற தகவலும் திரு. நல்லகண்ணு அவர்களிடமிருந்து எனக்கு வந்திருக்கிறது. இதில் எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லை. உறுதியாக அவர்களுக்கு வாடகையின்றி, அவர்களுடைய தியாகத்தைப் போற்றுகின்ற வகையில், அவர்கள் விரும்புகின்ற வீடு ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*